<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>அசல் வழக்கு எண். 53/2019</u>

DW2 – திரு. கண்ணன் நாள். 28.02.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் நான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எதிர்வாதம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி என்ற விவரத்தை மறைத்துள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் 2ம் பிரதிவாதியாக உள்ள விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் மறைத்துள்ளேன் என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. வாதிகள் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கில் அவர்கள் சொத்து கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் எனக்கு பங்குவேண்டும் என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். எங்களுடைய பூர்வீக இடமான நார்நாக்கால், நாய்குமாரி என்ற வயல்களை நான் விவசாயம் செய்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சுப்பிரமணியன் 2 வயல்களை விவசாயம் செய்து வருகிறார். தாவா சொத்துக்களுக்கான பயிர் இன்சூரன்ஸ் நான் வாங்கி கொள்கிறேனா என்றால் 1ம் பிரதிவாதி அவர் பெயரில் வாங்கி எனது பங்கை எனக்கு பிரித்து கொடுத்து விடுவார். அதன்படி நாங்கள் இருவரும் தான் பயிர் இன்சூரன்ஸ் பணத்தை

பெற்றுக் கொள்கிறோம்.

3. தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகம் செய்துகொள்ளப்பட்டது என்றும், அந்த பாகபிரிவினையின் படி எனது பாகத்தை நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றும் 1ம் பிரதிவாதி சுப்பிரமணியன் அவருக்கு ஒதுக்கிய பாகத்தை அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான எனது சகோதரர் சுப்பிரமணியனுக்கு சேட்டபாகம் என்று கூடுதலாக இடம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுப்பிரமணியன் விவசாயம் செய்யும் நிலங்களின் பெயர்கள் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் பாகம் பிரித்து கொடுத்துவிட்டதன் காரணமாகத்தான் 1ம் பிரதிவாதி விவசாயம் செய்யும் நிலங்கள் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் தனியாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடம் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி சுப்பிரமணி தனியாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், மேற்படி வீடானது பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி பாகப் பிரிவினையின் அடிப்படையில் எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நான் வீடு கட்டியும், 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவரும் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் வாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை.